# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.11/2026**

**2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 21- ம் நாள் புதன்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா. 01-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | 2-ம் நிலைக்காவலர் 1070 |
| பெயர் | - | சிபிசக்கரவர்த்தி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | பொன்னுச்சாமி | சமயம் | - | |
| கிராமம் | - | வால்பாறை காவல் நிலையம் | வயது | - | 33/2026 |
| சாதி | - | | | | |

**<u>21-01-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது வால்பாறை காவல் நிலையத்தில் 2-ம் நிலைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.12.2025-ம் தேதி மதியம் பணியில் இருந்த போது, காடம்பாறை காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் (பொறுப்பு ) திரு.முத்துக்குமாரசாமி அவர்களுக்கு உதவியாக நானும், காவலர் 1060 திரு.ஞானசுந்தரம் ஆகியோர்களுடன் மதுவிலக்கு, சூதாட்டம், கஞ்சா ஆகிய குற்றங்கள் நடைபெறுவதை தடுக்க நிலைய சரகத்திற்குட்பட்ட வால்பாறை டவுன், ஸ்டேன்மோர், பழைய வால்பாறை ஆகிய பகுதிகளில் கண்காணித்துக்கொண்டிருந்தபோது கிழக்கு நடுமலை பஸ் ஸ்டாப் அருகில் வந்தபோது அங்கு இருந்த ஒரு நபர் பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாகவும், அச்சுறுத்தும் வகையிலும் மது அருந்திக்கொண்டிருந்தவர் தங்களை கண்டதும் கையில் வைத்திருந்த மதுபாட்டிலை தூக்கி வீசிவிட்டு அவ்விடத்தில் இருந்து செல்ல முற்பட்டவரை பிடித்து விசாரித்தபோது முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தவர் இறுதியில் தனது பெயர் செல்வக்குமார் (வயது 26), த/பெ. கணேசன், 9/713 எம்.ஜீ.ஆர் நகர், வால்பாறை என்று கூறியவரை காரணம் கூறி 14.45 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் 15.15 மணிக்கு எதிரியை நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண் 162/2025 ச/பி 4-A TNP Act-ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக

இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க உதவியாக இருந்தோம். வழக்கு சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம் திருமதி.என்.மீனாட்சி, B.A., B.L., )

**மாவட்ட உரிமையியல் மற்றும்**

**நீதித்துறை நடுவர், வால்பாறை.**